# சிங்கள விவசாயிகள் மீது பொலிஸார் தடியடி


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 12 இதழ் 136
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26 -- 06 -- 1992


(கொழும்பு)

மகோ உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஜன சவிய உணவுமுத்திரைகள் கோரி மகஜர் கையளிக்கக் கூடிய ஆயிரக்கணக்கான சிங்கள விவசாயிகள் மீது பொலிசார் தடியடி நடத்தி அவர்களை விரட்டியடித்துள்ளதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் கடந்தவார முற்பகுதியில் இடம்பெற்றுள்ளது. மேற்படி சம்பவம் நடைபெற்றபோது இப்பகுதியிலுள்ள அம்பன்பொல என்ற

[4-ம் பக்கம் பார்க்க]

## 'ஐலன்ட்' உரிமையாளரின் சில சொத்துகள் சுவீகரிப்பு

(கொழும்பு)

'ஐலன்ட்' பத்திரிகை ஸ்தாபனத்தின் (உபாலி குறூப்) உரிமையாளரின் இரு தோட்டங்களை அரசு அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடந்தவாரம் சுவீகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசியல பழிவாங்கல் நோக்

[4-ம் பக்கம் பார்க்க]

## இந்தியக் குழுவிற்கு இலங்கையில் ஏமாற்றம்

(கொழும்பு)

ராஜீவ், பத்மநாபா கொலை வழக்குகள் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்த இலங்கைவந்த இந்தியக் குழுவிற்கு இலங்கை அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கவில்லை

(4ம் பக்கம் பார்க்க)

★ மட்டக்களப்பில்

# ரோந்துபடையணிமீது அதிரடி
# ஏழு இராணுவம் பலியானது

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு-சிங்கபுர இராணுவமுகாமிற்கு அருகில் நேற்று அதிகாலை இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் இழப்புகளுடன் தப்பியோடிவிட்டனர். பெருமளவு ஆயுதங்களும் மீட்கப்பட்டன.**

மட்டக்களப்பு சிங்கபுர இராணுவ முகாமிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் உள்ள இராணுவ காவலரணை நோக்கி நேற்று அதிகாலை 5-45 மணிக்கு 15க்கு மேற்பட்ட இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தபோது அக்காவலரணிலிருந்த விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின்போது ஜி-3 ரக துப்பாக்கி உட்பட 6 நவீன ரகத் துப்பாக்கிகளையும் மற்றும் இராணுவத் தளபாடங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

இருதரப்பினருக்குமிடையில் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சிங்கபுர இராணுவமுகாமிலிருந்து

[4-ம் பக்கம் பார்க்க]

## கே. ஜி. பி. விவகாரம்; விசாரணைக் கமிஷன் நியமனம்?

(கொழும்பு)

1989ம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது கே.ஜீ.பி. உளவு ஸ்தாபனம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு நிதி உதவி அளித்த விடயம் தொடர்பாக அரசு விசேட விசாரணைக் கமிட்டியை நியமிக்க உத்தேசித்துள்ளதாக கூறப்படுகிறது.

[4-ம் பக்கம் பார்க்க]

## வடக்கில் படை நடவடிக்கை; ராணுவம் ஆராய்ந்து வருகிறது

[கொழும்பு]

வடபகுதியில் அடுத்து மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கை குறித்து இராணுவ வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே தாக்குதலுக்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ள போதிலும் மேலதிக விபரங்கள் குறித்து படைத் தளபதிகளுக்கு விளக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை யாழ். குடா பகுதியின் கடற்பரப்பில் பல இடங்களிலும் பாரிய கடற்படைக் கப்பல்கள் நிலை கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## வெற்றிலைக்கேணியில் 2 படையினர் பலி

(கொழும்பு)

வெற்றிலைக்கேணி-கட்டைக்காடு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடும் மோதலில் 2 படையினர் பலியானதுடன் 5 படையினர் படுகாயமடைந்ததாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

படையினருக்கு உதவியாக குண்டுவீச்சு விமானங்களும்,

[4ம் பக்கம் பார்க்க]

## தெல்லிப்பளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாம் பகுதியிலிருந்து நேற்று பகல் 11 மணியளவில் தெல்லிப்பளைப் பகுதி குடியிருப்புகளை நோக்கி படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்

சீவல் தொழிலை மேற்கொண்டுவிட்டு இறங்கிக்கொண்டிருந்த சமயம் அவ்விடத்தில் ஒரு ஷெல் வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.

(4ம் பக்கம் பார்க்க).

## பூஸாவில் கோஷ்டி மோதல் ஒருவர் பலி; 62 பேர் காயம்
### இராணுவம் துப்பாக்கிச் சூடு

[காலி]

பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கிடையே ஏற்பட்ட பயங்கர கோஷ்டிமோதலில் ஒருவர் பலியானார். 62பேர் படுகாயமடைந்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் இரு கோஷ்டியாக பிரிந்து பயங்கர ஆயுதங்கள் சகிதம் சண்டையிட்டதாகவும் இந்த கோஷ்டி மோதலை தடுக்க இராணுவம் கடும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

படுகாயமடைந்த அனைவரும் காலி கராப்பட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்

(4ம் பக்கம் பார்க்க)

## சதாம் ஹுசைன் பதவி கவிழ்க்கப்படலாம்

(நியூயோர்க்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசேன் அதிபர் பதவியில் இருந்து தூக்கி எறியப்படலாம் என அமெரிக்க வெளியுறவுத்துறை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெளியிடுகையில்:- அதிபர் சதாம் ஹுசேன் எப்போது

[4ம் பக்கம் பார்க்க]

## 61 எண்ணெய்ப்பரல்கள் காவல்துறையால் மீட்பு

(காங்கேசன்துறை)

மண்ணெண்ணெயை பதுக்குவோரை கண்டுபிடிக்க சுன்னாகம் காவல்துறையினர் மேற்கொண்ட துரிதநடவடிக்கையால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணை பரல்கள் நேற்று கைப்பற்றப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

கோண்டாவிலில் 37 பரல்களும், ஊரெழுவில் 17 பரல்களும், உரும்பராயில் 5 பரல்களும், அளவெட்டியில் 2 பரல்களும் நேற்றுக் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணை சுன்னாகம் காவல்துறை பணிமனைக்கு முன்பாக வைத்தும், மருதனாமடம் பெற்றோல் நிலையத்தில் வைத்தும் பொதுமக்களுக்கு நேற்று காலையிலிருந்து மாலை வரை விநியோகிக்கப்பட்டது. (86)

## சபைமுதல்வர்பதவியிலிருந்து அமைச்சர் ரணில் நீக்கப்படலாம்

[கொழும்பு]

நாடாளுமன்ற சபை முதல்வர் பதவியிலிருந்து அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெகு விரைவில் நீக்கப்படவிருக்கிறார்.

அண்மைக்காலமாக ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நிலவிவருவதையடுத்து நாடாளுமன்ற சபை முதல்வர்பதவிக்குதனக்கு மிகவும் ஆதரவான ஒரு அமைச்சரை ஜனாதிபதி நியமிக்க உத்தேசித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இறைவன் திருநாமம்— நாமத்தின் மகிமையை விளக்கும் மற்றுமொரு புத்தகம். வெளியீடு ஞானயாகம் திவ்வியஜீவன சங்க மண்டபம், நல்லூர். கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம், நடுவுத்துருத்தி, அறிவாலயம், வாலாம்பிகா. [சி–6451]

### "சுவையகம்"

உங்களுக்கு தேவையான குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான சகல விதமான எமல்சன் வகைகளுக்கும், சிற்றிக் அசிற் என்பனவற்றிற்கும் இன்றே விஜம் செய்யுங்கள் "சுவையகம்" பிரதான வீதி (யூனியன் பெற்ரேல் நிலைய அருகாமை) சாவகச்சேரி. ஏ 2220)

### கல்வி

பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் பாலர் பாடசாலையும், ஆங்கில வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட உள்ளன மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் 276, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சி 6461)

### பரீட்சை (ஆண்டு 4)

ஆண்டு 4 பரீட்சை 28-06-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். ஆண்டு 4 வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். சி–6464


# நூல்வகைகள் விரைவில் விற்பனைக்கு

(யாழ்ப்பாணம்)

நெசவாளர்களின் பாவனைக்கென கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நூல்வகைகளும், ரசாயனப் பொருட்களும் யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினல் விரைவில விற்பனை செய்யப்பட்டவுள்ளது.

நெசவுத் தொழிலை செய்பவர்கள், இத்தொழிலை செய்வதற்கு தற்போது தயாராக இருக்கிறுர்கள்என்று அப்பகுதி கிராமசேவையாளரும் புடவை கைத்தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் உறுதி செய்த கடிதத்தை அப்பகுதி உதவி அரச அதிபா சிபார்சு செய்திருத்தல் வேண்டும்.

இதன் பின்பு மேற்படி சடதத்தை உதவிப்பணிப்பாளர் புடைவைக் கைத்தொழில் திணைக்களம், யாழ் செயலகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் யாழ் செயலகத்தில் இவ்விண்ணப்பங்கள் பரிசிலனை செய்த பின்பே யாழ். மாவட்டப்புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நூல்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். [வி]

## கலையரசு

# நூற்றுண்டு விழாபோட்டி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கலையரசு கலைக்கழக நடாகப் பயிற்சிக் கல்லூரி நடாத்தும் கலையரசு நூற்றுண்டு நினைவு விழா பேச்சு, கட்டுரை, வினு விடைப்போட்டிகள் நாளை 27-ம் திகதி சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

அத்துடன் நாடகப்போட்டி ஜூலை 18-ம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

# இன்று

## இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு இணிங்கித்தோட்ட முத்துக்குமார சுவாமிகோயில் வருடாந்த லட்சாரச்சனை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் சிறப்பாக நடைபெறுகின்றது.

மேற்படி லட்சார்ச்சனையை பொதுமக்களின் அனுசரணையுடன் ஆலய பரிபாலனசபையினர் சிறப்பாக நடாத்தவுள்ளனர்.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகா வித்தியாலய மாணவர்களுக்கிடையிலான வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

## அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ நித்தர் புலம்பதி செல்வமுத்துமாரியம்பாள் தேவஸ்தான அலங்காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெற்று 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூரத்திருநாளன்று முடிவடையும். அன்று சங்காபிஷேகமும் அன்னதானமும் இடம் பெறும்.

10 தினங்களும் விஷேட அபிஷேக ஆராதனைகளும் அம்பாள் வீதிவலம் வருதலும் இடம் பெறும்.

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் 'வரவு' மலர் வெளியீடு இன்று காலை 9-30 மணிக்கு பாடசாலை குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக திரு. ப. சிவநாதன் (யாழ். பல்கலைக்கழகம்) கலந்து கொள்கிறுர் நூல் வெளியீட்டுரையை அதிபர் திரு. அ.பஞ்சலிங்கமும் ஆய்வுரையை திரு. டபிள்யூ. ஜெ. சூசைரட்ணமும் நடாத்துவர்.

## போதைப்பொருள் எதிர்ப்புத்தினம்

(வடடுக்கோட்டை)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புத்தினம் இன்று வெளளிக்கிழமை மாலை 3 மணியளவில் சுழிபுரம்- தொல்புரத்தில் உள்ள வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனப் பணிமனையில் சம்மேளனத் தலைவர் திரு. நா. தவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது

யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் உட்பட பல பெரியார்கள்சிறப்புரையாற்றுவார்கள். யாழ். இந்து ஆசிரியர் திரு த.சிவகுமாரன் தலைமையில் பட்டி மண்டமும், பாட்டு, நடனம், நாடகம் முதலான பல கலைநிகழ்ச்சிகள் இவ்வைபவத்தில் இடம்பெறவுள்ளன. (139)

# விளையாட்டு போட்டி

(மானிப்பாய்)

இணுவில் கலாஜோதி சனசமூக விளையாட்டுப் போட்டி கடந்த 20ந் திகதி சனிக்கிழமை நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் இ. செல்வரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. (71)

# சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க சமாசங்களின் 10வது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடாத்தும் 10-வது ஆண்டு நிறைவு விழா நாளையும், நாளை மறுதினமும் சிறப்பாக அதன் தலைவர் திரு. ச, முருகநேசன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்ச்சி நாளை பி. ப 1-30 மணிக்கு ஆரம்பமாகும் விழாவில் தலைமை உரையை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி. யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா உட்பட பலர் நிகழ்த்துவர். சிறப்புரையும் இடம்பெறும்.

இதைத் தொடர்ந்து குழுப்பாடல், கிராமிய நடனம், வில்லுப்பாட்டு, நாடகமும் இடம்பெறும். (சி)

# பாவனையாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் உலர் உணவு பெறுபவர்கள் தங்கள் நிவாரண அட்டைகளை தங்கள் தங்கள் கிளைகளில் இம்மாதம் 29ம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு சங்கப் பொதுமுகாமையாளர் ஜெயராசா தெரிவித்துள்ளார்.

ஒப்படைக்காதவர்கள் அடுத்துவரும் நிவாரணப் பொருட்களை எடுக்கமுடியாது போய்விடும் என அவர்மேலும் கூறிஞர். (சு)

# பண்ணிசைப போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை காரைநகர் மாணவர்களுக்காக நடத்தும் அமரர் கந்தையா தர்மலிங்கம் ஞாபகார்த்த திருமுறைப் பண்ணிசைப்போட்டி 1992 (ஆண்டு 6 - 13 வரை) 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்:

பங்கு பற்றும் எல்லா மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டிலும் அதிவிசேட சித்தி பெறும் மாணவர்க்கு விசேடபரிசாக ரூபாய் நூறு காரைநகர் கிராம வங்கியில் வைப்பில் இட்டு வழங்கப்படும்.

# அனுதாபக் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சட்ட வைத்தியத்துறைப் பேராசிரியர் நவரத்தினம் சரவணபவானந்தன் அவர்கள் 24-06-1992 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார் அன்னரது இறுதிக்கிரியைகள 28-06-92 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லமான இல 1161, கோட்டா ரோட், ராஜகிரியா, கொழும்பில நடைபெறும். அன்னரது மறைவையொட்டிய அனுதாபக் கூட்டம் ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை, 26-06-92 காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

— துணைவேந்தர்

[எ 2252]


# ஓவியர் பெனடிக்ற்

ஈழத்திருநாட்டிற்குப் புகழ் சேர்த்த ஓவியர் அமரர் பெனடிக்ற் அவர்களின் திருவுருவ ஓவியத்தை எதிர்வரும் யூலை 5ந் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 3-00 மணிக்கு நல்லூர் ஆதீனத்தில் திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளோம்.

அமரரின் ஆர்வலர்கள் மாணுக்கர்கள், உறவினர்களை எம்முடன் உடன் தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

(ஏ 2248)

# அறிவித்தல்

நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பழைய மாணவர் சங்கத்தினரால் 24-06-92 பி. ப. 5-15 மணிக்கு கில்னர் மண்டபத்தில் இழுக்கப்பட்ட சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:-

5956 முதலாவது பரிசு
4454 இரண்டாவது பரிசு
767 மூன்ருவது பரிசு

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

(1) 5103 (2) 3090 (3) 514
(4) 4118 (5) 5679 (6) 4066

இதற்குரிய பரிசில்களை 27-06-92 சனிக்கிழமை காலை 10 30 மணிககு கைதடி நவீல்ட் பாடசாலையில பெற்றுக்கொளளவும்.

அ. பாலநாயகம்
தலைவர்

(சி 6463)

# சன்மார்க்க சபை - குரும்பசிட்டி

## இடம்பெயர்ந்த குரும்பசிட்டி மாணவர்களுக்கு

## பாடசாலை உபகரணங்கள் இலவச விநியோகம்

1990 ஆனி மாதம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளினுல் இடம்பெயர்ந்த குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதிபெற்றவர்கள் இம்மாதம் 27ம், 28ம் திகதிகளில் சபைத் தற்காலிக அலுவலகம் இயங்கும் மயிலணி ஒழுங்கை சுன்ணுகத்தில பிற்பகல் 3—5 மணிவரை தொடர்பு கொள்ளவும்.

க- விஸ்வநாதன்
பிரசார செயலாளர்.

(சி 6457

# External Degree Saiva Siddanta

The University of Jaffna offers a Special Degree Course in Saiva Siddanta Philosophy, leading to the Degree of Bachelor of Arts Applications are invited from the Graduates of any recognised University, in any discipline for enrolment as external students

Closing date will be 04 July 1992.

REGISTRAR,
University of Jaffna.
(A 2250)

## கலாலயாவின்

# மனைப் பொருளியலும் கைத்திறனும் பொருட்காட்சி

★ ஓவியங்கள் ★ கைப்பணிகள்
★ செயற்கை மலர்கள்
★ கேக் அலங்காரம் ★ உணவு வகைகள்
★ தைத்த ஆடைகள்

இடம்: கலாலயா, விக்டோரியா வீதி, யாழ். நகர் (ஆஸ்பத்திரியின் பின்புறம்)

காலம்: 1992 ஜூன் 27ஆம், 28ஆம், 29ஆம், திகதிகளில் காலை 9 00 முதல் மாலை 6-00 வரை.

[எ–2249]

## போலிப்பத்திரங்கள் அச்சிட்ட அச்சகம் முற்றுகை

(கொழும்பு)

போலி அடையாள அட்டைகள், தராதரப்பத்திரங்கள் அச்சிட்டுவந்த அச்சகமொன்றைப் பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

களனியில் அச்சகமொன்றில் போலியாக கல்வித்தராதரப்பத்திர வகைகள், பிறப்பு இறப்பு திருமண அத்தாட்சிப் பத்திரங்கள், அடையாள அட்டைகளை அச்சிட்டுவந்ததைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த அச்சக உரிமையாளர் உட்பட 3 சந்தேக நபர்கள் கைதாகியுள்ளனர். (கே)

## ஆசிரியர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

(மொன்ருகலை)

நாட்டில் நிலவும்பாடசாலை ஆசிரியர் வெற்றிடங்கள் இவ்வருடம் செப்டம்பர் மாத முடிவுக்குள் நிரப்பப்படுமென நீதி உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

கிராம எழுச்சிக் சண்காட்சி திடலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (கே)

## விவசாய டிப்ளோமாக்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு

(வவுனியா)

வவுனியா விவசாயக் கல்லூரியில் கல்வி கற்று சித்தியடைந்த 17 மாணவர்களுக்கும் வேலைகிடைக்கவுள்ளது.

இவ்வருட கற்கைநெறியை முடித்து வவுனியா விவசாயக் கல்லூரியிலிருந்து வெளியேறிய 17 மாணவர்களுக்கும் அடுத்த மாதம் முதலாம் திகதி வவுனியா உதவி விவசாயப் பணிப்பாளர் விஸ்தரிப்பு அலுவலகத்தில் அவர்களுக்கான பதவி நியமனம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் அவர்கள் அனைவரும் தவருது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (கே)

## லண்டன் வங்கியில் மோசடி; இலங்கையரின் வீட்டை பொலிஸார் கண்டுபிடித்தனர்

(கொழும்பு)

லண்டனில் வங்கி மோசடிகளில் ஈடுபட்டு இலங்கைக்குத் தப்பி வந்த ஒருவரைப் பற்றி விசாரணை செய்யவந்த ஸ்கொட்லண்டயார்ட் பொலிசார் கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரின் வீட்டைக் கண்டுபிடித்துள்ளனர்.

கியூபா, அமெரிக்கா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த சிலர் ஒரு கோஷ்டியாக இயங்கி, லண்டனில் உள்ள வங்கிகளில் பல லட்சம் பவுண் மோசடிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவர்கள் லண்டனிலும், தத்தமது நாடுகளிலும் பல வீடுகளையும், கட்டிடங்களையும் வாங்கியுள்ளதாக தற்போது விசாரணைகளில்தெரிய வந்துள்ளது. (வி)

## பணம் பறிக்கும் கோஷ்டி கொழும்பில் அதிகரிப்பு

(கொழும்பு)

புலி ஆதரவாளர்கள் என்றும், சி. ஐ. டி. பொலிசாரென்றும் கூறி கொழும்பில் தங்கியிருக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களிடம் பணம் பறிக்கும் கோஷ்டிகள் கொழும்பில் அதிகரித்து வருகின்றன.

ஜம்பட்டா வீதியில் சி. ஐ. டி. பொலிசார் எனக்கூறி, யாழ்ப்பாணத்திலிருந்து வந்து தங்கியிருக்கும் தமிழர் ஒருவரிடம் பணம் பறிக்க முற்பட்ட 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வாரமும் இதே முறையில் பணம் பறிக்க முற்பட்ட 3 பேர் கைதாகியுள்ளனர். (கே)

## தமிழ் பயணிகளிடம் ரயில்வே ஊழியர் கெடுபிடி

(கொழும்பு)

வடபகுதி ரயில் பிரயாணிகளை ரயில்வே ஊழியர்கள் கெடுபிடியில் ஆழ்த்தி வருவதாக கூறப்படுகிறது

பிரயாணிகள் ஓரளவு பொதியைதம்முடன்கொண்டு செல்ல அனுமதி உண்டென்றும், அதை தடைசெய்யும் ஊழியர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் கொழும்பு கோட்டை ரயில் நிலயத்தில் வடபகுதிக்கு பிரயாணிகள் பலர் றிக்கற் சோதனையிடும் வாசலில்நிற்கும் ரயில் ஊழியர்களால் பொதிகள்கொண்டு செல்ல முடியாதென தடுத்து நிறுத்தப்பட்டனர். (கே)

### "சந்தானம்" என்றொரு சங்கீதப் பேராறு!

சிந்தையை அள்ளி ஓடும்
சீரிய நாத வெள்ளம்;
தந்தையைப் போல நின்று,
தந்தவன் மாண்டுவிட்டான்!

0 0

காதினிற் சுகத்தை யூட்டும்
கானத்தைத் தந்து நிற்கும்
போதினில் விபத்து வந்து
பொசுக்கிடப் போனதெங்கே?

ஜெ. கி. ஜெயசீலன்.

# உதவிப் பணம் பெறும் 15,000 பேர் பரிதவிப்பு

## 4 மாதமாக உதவியில்லை

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் சுமார் 15,000 பேர் கடந்த நான்கு மாதங்களாக பரிதவிக்கின்றனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து மாதாந்தம் சமூகசேவைப் பகுதியினரால் வழங்கப்படும் பொதுசனமாதாந்த உதவிப்பணம் பெறும் சுமார் பதினையாயிரம் பேர் கடந்த நான்கு மாதங்களாக உதவிப்பணம் வழங்காமையினால் பெரும் அவதியுறுகின்றனர். பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் இந்த வயோதிபர்கள் கிராம உத்தியோகத்தர்களின் பணிமனைகளுக்கும் தபால் கந்தோர்களுக்கும் அலைந்து திரிவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த மாசி மாதம் வழங்கிய பின்பு இதுவரை இவர்களுக்கான உதவிப்பணம் வழங்கப்படவில்லை.

யாழ். செயலக சமூக சேவைப்பகுதியினர் இந்த வறியவர்களின் பொதுசன மாதாந்த உதவிப்பணத்தை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொது நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களிற்கு பின்பு வறியவர்களுக்கு வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மாதம்தோறும் வழங்கப்படுவதில்லையென்று வறியவர்களான வயோதிபர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (137)

## யாழ். ஆயருக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுநிலைப் பிரான்சிஸ்கன் சபை மாதாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 20ந் திகதி நடைபெற்றபோது ஓய்வு பெறும் யாழ், ஆயர் வண தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு வரவேற்பு அளித்து கௌரவித்தது.

யாழ். ஆயரை வரவேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சபைத்தலைவர் எஸ். அந்தோனிப்பிள்ளை செயலர் எஸ். ஜே. அன்ரனி, திருமதி அ. பேரின்ரூஸ், திருமதி அ. புளோறன்சியா ஆகியோர் உரையாற்றினர்கள்.

## இராசி பலன்

26-06-1992

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஆனி 11)

ஏகாதசி ந.இ. 12-03 வரை; பரணி வைகரை 5, 49 வரை, சித்தயோகம் ஏகாதசி விரதம் இராகுகாலம் காலை 10-25 முதல் 11-55 வரை சுபநேரம் அதிகாலை 5,55 முதல் 7-25 வரை.

மேடம்: காரியசாதனை, பெண்சகாயம், தெய்வவழிபாடு.

இடபம்: தொழிலாளர் தகராறு, குடும்ப அமைதியின்மை. செலவு.

மிதுனம்: மனநிம்மதி, உறவினர்வருகை, காரியசித்தி.

கடகம்: மறைமுகஎதிர்ப்பு. அதிகாரிகள் நன்மை, பணவரவு.

சிங்கம்: எதிர்ப்புகளால் கவலை, வீண்கலவரம். உஷ்ணரோகம்.

கன்னி: தேகநிலைபாதிப்பு, மனசஞ்சலம், அமைதியின்மை

துலாம்: குடும்ப சந்தோஷம், நல்லதகவல்கள், காரிய சித்தி

விருச்சிகம்: விருந்துண்ணலாபதினம். தொழில்சிறப்பு.

தனுசு: தொழில்துன்பம், மனகலக்கம், வீண்வாதம்.

மகரம்: திடீர்பயணம், கோபமிகுதி, மனக்குறை.

கும்பம்: பெரிய இடத்து உதவி, நண்பர் ஆதரவு, தெய்வீக செலவு.

மீனம்: இடமாற்றம், விவகாரங்கள் கவலை, சகோதர பகை.

— ஜோஸ்பர்

## சைக்கிள் லைசென்ஸ் பெற நீண்ட கியூ

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையில் சைக்கிள் உரிமையாளர்கள் இவ்வருடத்துக்கான சைக்கிள் லைசென்சுகளைப் பெறுவதற்கு நீண்ட வரிசையில் நிற்பதைக்காணக்கூடியதாக இருந்தது.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உட்பட்ட வீதிகளில் சைக்கிள் லைசென்சுகள் பற்றி திடீர் சோதனை செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்தே மக்கள் லைசென்சை பெறுவதற்காக யாழ். மாநரசபைக்கு சென்றிருந்தனர்.

நேற்று முன்தினம் பெருமளவு சைக்கிள் லைசென்சுகள் வழங்கப்பட்டுள்ளது. (வி)

## இந்திய ஜனாதிபதி தேர்தல்: பேராசிரியர் சுவெல் வேட்புமனு தாக்கல்

(புதுடில்லி)

இந்திய குடியரசு தலைவர் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் பேராசிரியர் சுவெல்லின் சார்பில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

பேராசிரியர் சுவெல் சார்பில் பாரதீய ஜனதாக்கட்சி, தேசிய முன்னணி, ஜனதா தள்ளைச் சேர்ந்த தலைவர்கள் வேட்பு மனுக்களை முன்மொழிந்து ஆமோதித்தனர்.

பேராசிரியர் சுவெல் 1962 முதல் 1967 வரை லோகசபா உறுப்பினராகவும் 1967 முதல் 1977 வரை சபையின் துணை சபாநாயராகவும், நோர்வே, ஐஸ்லாந்து, பர்மா ஆகிய நாடுகளில் இந்திய தூதுவராகவும் பணியாற்றினார்

டாக்டர் சங்கா தயாள் சர்மாவிற்கான வேட்பு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டது. குடியரசு தலைவர் தேர்தலில் இதுவரை 31 வேட்பாளர்களுக்கு 53 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது

## மட்டக்களப்பில் சிங்கள மொழி கட்டாய பாடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சிங்களமொழியையும் அரசு கட்டாயபாடமாக அமுல் படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 30 தமிழ் பாடசாலைகளிலும் சிங்களமொழிஇணைப்பு மொழியாகவும், அங்குள்ள சிங்களப் பாடசாலைகளில் தமிழ்மொழி இணைப்புமொழியாகவும் கற்பிக்கப்படுமென்று அரசு முன்னர் தெரிவித்திருந்தது.

ஆனல் தற்போது தமிழ் மாணவர் மீது சிங்களமொழியைத் திணித்து, சிங்கள மாணவர்களுக்கு தமிழ் கற்பிப்பதே இல்லையென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## 10 வருட சேவையாயின் ஆசிரியர் இடமாற்றம்

(கொழும்பு)

ஒரு பாடசாலையில் தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிவரும் ஆசிரியர்களுக்கு கட்டாய இடமாற்ற உத்தரவு வழங்படவுள்ளது.

ஒரே பாடசாலையில் ஆசிரியர்கள் நீண்டகாலமாக சேவையாற்றிவருவதனல் கிராமப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை நிலவுவதினல் இங்குள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதினலேயே மேற்படி இடமாற்ற உத்தரவு மிக விரைவில் அமுல்படுத்தப்படவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## பலஸ்தீனியர்களுக்கு சுயாட்சி வழங்கப்படும் ரொபின் அறிவிப்பு

(ரெல் அவீவ்)

புதிதாக இஸ்ரேலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ள தொழிற்கட்சித் தலைவர் திரு ரொபின், பாலஸ்தீனியர்களுக்கு இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் சுயாட்சி வழங்கப்போவதாகக் கூறியுள்ளார்.

பீ. எல். ஓ. தலைவர்களுடனு தற்போதுள்ள தடையையும் தான் மீள் பரிசீலனை செய்யப்போவதாகவும் கூறியுள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசங்களில் யூதர்களை பலவந்தமாக குடியேற்றும் திட்டத்தையும் கைவிடப் போவதாகதெரிவித்துள்ளார்.

இஸ்ரேலினுல் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் வாழும் பாலஸ்தீனியர்கள் திரு. ரொபின் வெற்றியை மகிழ்ச்சியோடு வரவேற்றுள்ளனர்.

# ராஜீவ் கொலை வழக்கில் 1,300 பேர் சாட்சியாக பதிவு

[சென்னை]

ராஜீவ் கொலை வழக்கில் குற்றமசாட்டப்பட்டுள்ள 41 பேரில் இந்திய குற்றவியல் சட்டம் 120 [B] 302, 326, 324, 201, 212 உட்பிரிவுகள், வெடிபொருள் கையாளல் சட்டம் 2, 3 4, 5 பிரிவு. சுடுகலன் பாவனை 25, 27 பிரிவு, கடவுச் சீட்டு நடைமுறை 12ம் பிரிவு, வெளிநாட்டவர் சட்டம் 14 ஆகியவற்றின் பிரகாரம் குற்றப்பத்திரிகை தாக்கலாகியுள்ளது.

இத்தகவலை சென்னையிலிருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகை வெளியிட்டுள்ளது. இவ்வழக்கிற்கான குற்றப்பத்திரிகை 500 பக்கங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. வழக்கின் சாட்சிகளாக, ஸ்ரீபெரம்பத்தூர் லோக்சபா உறுப்பினர் மரகதம் சந்திரசேகரர், மகள் லதா உட்பட 1300 பேர் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் 10 பேர் இலங்கையர் காவலிலுள்ளனர். மூவர் கைது செய்யப்படவேண்டியவர், 12 பேர் மரணமாகியுள்ளனராம் [எஸ்]

# மண்ணெண்ணை தேடி நேற்றும் மக்கள் அலைவு

(யாழ்ப்பாணம்)

வீதியோரங்களில் மண்ணெண்ணை வியாபாரம் செய்யும் மண்ணெண்ணை சந்காடி வியாபாரிகளின் போத்தல்கள் அனைத்தும் நேற்று வெறுமையாகவே காட்சியளித்தன.

அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட பெற்ரேல், டீசல், ஓயில் போன்றவையே இவர்களிடம் தற்போது தாராளமாக இருக்கின்றன. ஆனல் மண்ணெண்ணை மட்டும் இவர்களிடமிருந்து மாயமாக மறைந்ததையிட்டு பொதுமக்கள் பெரிதும் ஆச்சரியமடைகிருர்கள்.

பொதுமக்களின் ஆதரவுடன் இந்த மண்ணெண்ணைப் பதுக்கல் மிக விரைவில் முறியடிக்கப்பட்டு இதன் சூத்திரதாரிகள் பொதுமக்கள் முன் நிறுத்தப்படுவார்கள் என்று தமிழீழ காவல் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேலணை ப. நோ. கூ. சங்கமும், யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கமுமே கடந்த மூன்று நாட்களாகப் பொதுமக்களுக்கு மண்ணெண்ணையை விநியோகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (வி)

# அனாதைச் சிறுவர்களுக்கு 'றெட்பாஞ' உதவும்

[யாழ்ப்பாணம்]

இராணுவ நடவடிக்கைகளினாலும், வன்செயல்களினாலும் யாழ். மாவட்டத்தில் அனாதைகளாக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு "றெட்பாஞ" நிறுவனம் முன்வந்துள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரின் வேண்டுகோளின் பெயரில் 1987-ம் ஆண்டிலிருந்து இதுவரை அனாதைகளாக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களைபேணுவதற்கு றெட்பாஞ நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரச அதிபர் பிரிவுகளிலுமுள்ள அனாதைச் சிறுவர்களின் விபரங்களை யாழ். அரச அதிபர் கோரியுள்ளார். (வி)

## அநுரா பயணம்

[கொழும்பு]

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்கா இரண்டுவார சுற்றுப்பயணமாக மெக்ஸிக்கோ சென்றுள்ளார். [மா]

## சபை முதல்வர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உணவு கூட்டுறவு அமைச்சர் வீரசிங்க மல்லமாராய்ச்சி வெகு விரைவில் நாடாளுமன்ற சபைமுதல்வராக நியமிக்கப்படவிருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது.

லலித்-காமினிக் குழுவின் திரு. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (மா)

## ஐலன்ட்

[1-ம பக்கத் தொடர்ச்சி]

கத்துடனேயே அரசு இதனைச் செய்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஊவா மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் மேற்படி உரிமையாளரின் இரு தோட்டங்களே சுவீகரிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. (மா)

# ஏனைய கட்சிகளுடன் தமிழ் கட்சிகள் பேசும்

[கொழும்பு]

கடந்தவாரம் இனப்பிரச்னை தொடர்பாக ஜனதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய தமிழ் அரசியல் கட்சிகள் ஏனைய அரசியல் கட்சிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளன.

தங்களது 4 அம்சத் திட்டம் பற்றி ஏனைய அரசியல் கட்சிகளுக்கு இவை விளக்கமளிக்கவுள்ளதாக கூறப்படுகிறது

ஆரம்ப நடவடிக்கையாக நேற்றுமுன்தினம் கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர்களுடன தமிழ் கட்சியின் பிரதிநிதி பேச்சு நடத்தியுள்ளார். [சே]

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு கட்டிடம் நன்கொடை

[யாழ்ப்பாணம்]

யாழ். ஜும்மா மசூதி வீதியிலுள்ள மலாயன் இலங்கையர் சங்கத்தின் காணியையும் கட்டிடங்களையும் யாழ்.பல்கலைக்கழக அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் உதவும் பொருட்டு நன்கொடையாகவழங்குருதென இச் சங்கத்தின் காப்பாளர்கள் முடிவு செய்ததற்கிணங்க மேற்படி சொத்துக்கள் யாவும் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களிடம் கடந்த புதன்கிழமை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

சுமார் 3 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க இச் சொத்துக்களை நன்றியுடன் பொறுப்பேற்ற உபவேந்தர், பல்கலைக்கழகம் அதற்குத் தேவையான நிதிவளங்களைப் பெறுவதற்கு அரசாங்கத்தில் மாத்திரம் தங்கியிராது பொது நிறுவனங்கள், நலன் விரும்பிகளிடமிருந்தும் பெறவேண்டிய காலகட்டத்தில் உள்ளதைச் சுட்டிக் காட்டி மலாயன் இலங்கைச் சங்கம் இவ்வாருன நடவடிக்கைகளிற்கு முன மாதிரியாகத் திகழ்ந்துள்ளதை வரவேற்றுள்ளார்,

## வீரச் சாவு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு கட்டைக்காட்டு பகுதியில் கடந்த 23-ம் திகதி நடைபெற்ற மோதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த பொழுது 25ம் திகதி வீரச்சாவைத்தழுவிக்கொண்ட எம்மவரான புகழ் அரசன் [பொன்னையா சுதர்சன் கோப்பாய் வடக்கு] க்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இந்த மாவீரனின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று மாலை 3-00- 4 00 மணி வரை கோப்பாய் வடக்கு சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்ற பின்னர் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் புதைகுழியில் விதைக்கப்படும்.

## சிங்கள

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இடத்தில் தனது தோட்டத்தில் ஜனதிபதி பிரேமதாசா தங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறது

பொலிசாரின் தடியடி பிரயோகத்தில் இலக்காகி பாதிக்கப்பட்ட மேற்படி விவசாயிகள் ஐக்கியதேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## கே. ஜி. பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசேட விசாரணைக்கமிட்டியின் தலைவராக முன்னள் சிரேஷ்ட உதவி பொலிஸ்மா அதிபர் டிரல் குணதிலக நியமிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## சதாம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பதவியிலிருந்து தூக்கி எறியப்படுவார் என்பது பற்றி இப்போது கூறமுடியாது எனவும் ஆனல் அவரது பதவிக் காலம் நெருங்குவதற்குள் அவர் தூக்கி எறியப்படுவார் எனவும் அவர் தனது பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார், (க)

## தெல்லிப்பளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை சித்தியம்புளியடி சட்டுவன் வீதியைச்சேர்ந்த வேலன் கந்தசாமி (39-வயது) என்பவரே காயமடைந்தவராவார். அப்பகுதியில் 15க்கு மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. (56)

## மட்டக்களப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'பவள்' கவச வாகனங்கள் சகிதம் மேலதிக இராணுவத்தினர் உதவிக்கு வந்தபோது விடுதலைப்புலிகளின் பிறிதோர் அணி தாக்குதலை மேற்கொண்டது.

இத்தாக்குதலின்போது ஜி-3 ரகத் துப்பாக்கி 1, அதற்குரிய ரவைக்கூடுகள் 6, ரி-59 இரண்டு ரகத் துப்பாக்கி 2, ரி-56 ஒன்று ரக துப்பாக்கி 3, அதற்குரிய ரவைககூடுகள் 19 உயர்வலு தொலைத் தொடர்புச் சாதனம் -01, நேட்டோ ரவைகள் - 114, நடுத்தர ரவைகள் - 731, ஜே ஆர். கைக்குண்டுகள் - 02, ஏ. கே. ரவைககூடுகள் தாங்கி அணியங்கள் - 06, சப்பாத்து 4 சோடி, இராணுவ பைகள் 02. தொப்பிகள் - 02 மற்றும் இராணுவ தளபாடங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

இம்மோதலின்போது விடுதலைப்புலிகள் தரப்பில் அற்புதன் [விபுலானந்தன் உதயகுமார், மட்டக்களப்பு] வீரச்சாவைத் தழுவிக்கொண்டார் இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (ச)

## இந்தியக்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இக்குழு அண்மையில் தமிழகத்திலிருந்து கொழும்பு வந்திருந்தது.

இலங்கையில் போதியளவு ஒத்துழைப்புகிடைக்காததால் இக்குழு பலத்த ஏமாற்றத்துடன் தமிழ்நாடு திரும்பியதாகவும்தெரிவிக்கப்படுகிறது. [மா]

## வெற்றிலைக்கேணியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஹெலிகொப்டரும் தாக்குதல் நடத்தியதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன

படையினர் முன்னேற முயன்றபோதே இக்கடும் மோதல்இடம்பெற்றதாம்.(கி)

## பூஸாவில்


(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின்கீழ்தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர் எவரும் பாதிக்கப்படவில்லையென பிரஸ்தாப ராணுவமுகாமைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் பூஸா முகாமிலிருந்து பயங்கர ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. [கே]

# எமது அஞ்சலி



பேராசிரியர்

நவரட்ணம் சரவணபவானந்தன்

MBBS (Cey) MRCP (UK) FRCP (EDIN) DMT (LOND)

(18-04-1935 — 23-06-1992)

யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் சட்ட மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் ந. சரவணபவானந்தன் அவர்களின் திடீர் மறைவு எம்மைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இது எமக்கு ஈடு இணையற்ற இழப்பாகும். அன்னரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேம்.

மருத்துவபீட ஆசிரியர், ஊழியர், மாணவர்.

(ஏ-2251)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Nnmber B/10336/1